# 11

# திருமணமும் விவாகரத்தும்

TML 011

ஒன்ராறியோவில் உள்ள பெண்களுக்கான குடும்பச் சட்டம்



## அனைவரும் பெண்கள்.
## ஒரு குடும்பச் சட்டம்.
### உங்களுடைய உரிமைகளை அறியுங்கள்.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# திருமணமும் விவாகரத்தும்

*சட்டம்சார்ந்த விடயங்களின் அடிப்படை விளக்கத்தை உங்களுக்குத் தருவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். தனிப்பட்ட சட்டபூர்வ ஆலோசனையை மற்றும் உதவியை இது பிரதியீடு செய்யமாட்டாது. குடும்பச் சட்ட விவகாரங்களில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உங்களுக்குள்ள தெரிவுகளை விளங்கிக்கொள்வதற்கும் உங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முடியுமான விரைவில் சட்டபூர்வ உதவியைப் பெற்றுக்கொள்வது சிறந்தது எனப் பரிந்துரைக்கப்படுகின்றது. குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரை எப்படிக் கண்டறிவது மற்றும் அவருக்கு எப்படிக் கட்டணம் செலுத்துவது என்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு, "உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு உதவி தேடல்" என்ற எங்களுடைய கையேட்டைப் பாருங்கள். "குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைத் தேடல்", "திருமணமாகிய மற்றும் இணைந்துவாழும் பங்காளிகளின் சொத்து உரிமைகள் மற்றும் கடமைகள்", மற்றும் ஏனைய குடும்பச் சட்ட விடயங்கள் பற்றிய எங்களுடைய இணையக் கருத்தரங்குகளையும் நீங்கள் பார்க்க நீங்கள் விரும்பலாம். இந்த ஆதாரவளங்கள் அனைத்தும் எங்களுடைய இணையத்தில் www.onefamilylaw.ca உள்ளன.*

## கனடாவில் ஒரு சட்டரீதியான திருமணம் என்றால் என்ன?

கனடாவில் திருமணச் சடங்குகள் சட்டபூர்வமானவையாக இருக்க வேண்டுமாயின், பங்காளிகள் இருவரும் இரண்டு தொகுதி விதிகளைப் பின்பற்ற வேண்டும். விதிகளின் முதலாவது தொகுதி, எவருக்குச் சட்டபூர்வமாக திருமணம் செய்து கொள்ள அனுமதி இருக்கின்றது என்பதுடன் தொடர்பானது. இரண்டாவது தொகுதி, உங்களுடைய திருமணச் சடங்கு எப்படி நடக்கின்றது என்பதுடன் தொடர்பானது.

### 1) ஒன்ராறியோவில் யார் திருமணம் செய்யலாம்?

எவர் சட்டபூர்வமாகத் திருமணம் செய்யலாம், எவர் செய்யக்கூடாது என்பது பற்றிய சட்டங்கள் இருக்கின்றன. சட்டபூர்வமாகத் திருமணம் செய்ய எவருக்கு அனுமதி இருக்கின்றது என்பது பற்றிய பிரதானமான விதிகள் இதோ:

a) ஒன்ராறியோவில் திருமணம் செய்வதற்கு, குறைந்தது நீங்கள் **18 வயதுடையவராக** இருக்க வேண்டும்.

- நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவராக இருந்தால், அதற்கு ஒரு சில விதிவிலக்குகள் உள்ளன. பெற்றோர் இருவரினதும், சட்டபூர்வமான பாதுகாவலரின் அல்லது நீதிமன்றத்தின் எழுத்துமூலமான அனுமதி உங்களிடம் இருந்தால், நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். ஏனைய மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் வெவ்வேறு வயது விதிகள் இருக்கின்றன.

b) பெற்றோரின் அனுமதி இருந்தாலும்கூட, **16 வயதுக்குட்பட்ட** பிள்ளைகள் கனடா முழுவதும் திருமணம் செய்யமுடியாது. திருமணம் செய்துகொள்பவரில் ஒருவர் 16 வயதுக்குட்பட்டவர் என உங்களுக்குத் தெரியுமானால், அந்தத் திருமணச் சடங்கைக் கொண்டாடுவது, அதற்கு உதவிசெய்வது அல்லது அதில் பங்குகொள்வது குற்றவியல் சட்டத்துக்கு எதிரானது ஆகும்.

c) திருமணம் செய்யக்கூடிய சட்டபூர்வமான வயதுள்ள எவரையும் நீங்கள் திருமணம் செய்யலாம். அந்தப் பங்காளர் எந்த பால் அல்லது பாலினம் என்பது ஒரு விடயமே இல்லை.

d) இரத்தத்தால் அல்லது தத்தெடுப்பால் நீங்களும் உங்களுடைய பங்காளரும் மிகவும் நெருங்கிய உறவினராக இருந்தால், நீங்கள் திருமணம் செய்துகொள்ள முடியாதிருக்கலாம். உங்களுடைய பெற்றோரை, பேரரை, பிள்ளையை, பேரப் பிள்ளையை, சகோதரரை அல்லது சகோதரியை, ஒன்றுவிட்ட உடன்பிறந்தாரைத் திருமணம் செய்வது சட்டத்துக்கு விரோதமாகும்.

e) ஏற்கனவே நீங்கள் திருமணமானவராக இருந்தால், இன்னொருவரை நீங்கள் திருமணம் செய்ய முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட துணைவரை வைத்திருப்பது, கனடாவில் சட்டத்துக்கு விரோதமானது. இது **பலதார மணம்** எனப்படுகின்றது.

- கடந்த காலத்தில் நீங்கள் திருமணம் செய்திருந்தால், இன்னொருவரை நீங்கள் திருமணம் செய்ய முன்னர், விவாகரத்து அல்லது இறப்புக் காரணமாக, அந்த நபருடன் தற்போது நீங்கள் திருமண பந்தத்தில் இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும். கனடாவுக்கு வெளியே நீங்கள் விவாகரத்துச் செய்திருந்தால், அந்த நாட்டில் உங்களுடைய விவாகரத்து சட்டபூர்வமானது என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டியிருக்கும். (விவாகரத்து பற்றிய மேலதிக தகவல்கள் கீழே உள்ளன).

f) திருமணம் செய்து கொள்வது என்றால் என்னவென்று நீங்களும் உங்களுடைய பங்காளரும் விளங்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் இருவரும் திருமணம் செய்வதற்கு தன்னார்வத்துடன் சம்மதிக்க வேண்டும். இதை, "**புத்தித் தெளிவுடனான தகவலறிந்த ஒப்புதல்**" என சட்டம் கூறுகின்றது.

- திருமணம் செய்வதற்காக நீங்கள் வற்புறுத்தப்பட்டால், அது சட்டபூர்வமான திருமணம் அல்ல. பங்காளர் ஒருவருக்குத் திருமணம் செய்ய விருப்பமில்லை, அவர் திருமணத்துக்காக வற்புறுத்தப்பட்டிருக்கிறார் என உங்களுக்குத் தெரியுமானால், அந்தத் திருமணச் சடங்கைக் கொண்டாடுவது, அதற்கு உதவிசெய்வது அல்லது அதில் பங்குகொள்வது குற்றவியல் சட்டத்துக்கு எதிரானது ஆகும்.

**2) உங்களுடைய திருமணச் சடங்குக்கான தேவைகள்**

திருமணம் செய்து கொள்வது பற்றிய இரண்டாவது தொகுதி விதிகள், உங்களுடைய திருமணச் சடங்கு எப்படி நடத்தப்படுகின்றது என்பதுடன் தொடர்பானவையாக இருக்கின்றன. கனடாவில் நீங்கள் திருமணம் செய்துகொண்டால், உங்களுடைய சடங்கு நடக்கும் மாகாணத்தின் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும்.

இரண்டு பங்காளர்களும் அந்தச் சடங்குக்கு நேரில் சமூகமளிக்க வேண்டும். தொலைபேசி அல்லது இணையம் ஊடாகத் திருமணம் செய்துகொள்வது சாத்தியமற்றது. அந்தச் சடங்கை

நடாத்த சட்டபூர்வமான அனுமதி பெற்ற ஒருவரின் முன் இரண்டு பங்காளர்களும் நிற்க வேண்டும்.

ஒன்ராறியோவில், நீங்கள் திருமணம் செய்துகொள்தற்கு முன்னர், நீங்கள் வாழும் நகரில் அல்லது மாநகரத்திலுள்ள அரச அலுவலகம் ஒன்றிடமிருந்து **திருமண அனுமதிப்பத்திரம்** ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனுமதிப் பத்திரத்துக்கு ஒரு சிறிய கட்டணம் உண்டு. இந்தப் பத்திரம் மூன்று (3) மாத காலத்துக்குச் செல்லுபடியாகும். ஒன்ராறியோவில், திருமணச் சடங்கை நடாத்தும் அந்த நபரின் கையொப்பத்தைப் பெறுவதற்காக, இந்த அனுமதிப்பத்திரத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும்.

ஒன்ராறியோவில், திருமணம் ஒன்று சட்டபூர்வமானதாக இருப்பதற்கு, உங்களுடைய திருமணச் சடங்கை நடாத்துபவர் அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரம் பெற்றவராக அல்லது அங்கீகரிக்கப்பட்டவராக இருக்க வேண்டும். ஒன்ராறியோவில், மத அல்லது குடிமுறைச் (மதரீதியற்ற) சடங்கு மூலம் நீங்கள் திருமணம் செய்துகொள்ளலாம்.

- மதச் சடங்கு: ஒரு பாதிரியார், ஆச்சாரியார், யூத குரு அல்லது இஸ்லாமிய குரு போன்ற ஒன்ராறியோவில் மக்களைத் திருமணம் செய்துவைப்பதற்காகப் பதிவுசெய்திருக்கும் மத அதிகாரி ஒருவர் உங்களுக்கு சட்டபூர்வமாகத் திருமணம் வைக்க முடியும்.
- குடிமுறைச் சடங்கு: நீதிபதி, சமாதான நீதவான், நகரசபை ஊழியர் அல்லது ஒன்ராறியோவில் திருமணச் சடங்கை நடாத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒருவர் உங்களுக்கு சட்டபூர்வமாகத் திருமணம் வைக்க முடியும்.

**திருமண அத்தாட்சிப் பத்திரம்** என்பது சட்டபூர்வமாக நீங்கள் திருமணம் செய்துள்ளீர்கள் என்பதை நிரூபிக்கும் அதிகாரபூர்வமான ஒரு பத்திரமாகும். உங்களுடைய திருமணச் சடங்கைப் பார்த்த இருவர் திருமண அனுமதிப் பத்திரத்தில் கையெழுத்திடுவதுடன், உங்களுடைய சடங்கை நடாத்தியவர்

கையொப்பமிடப்பட்ட மற்றும் நிரப்பப்பட்ட அந்த திருமண அனுமதிப் பத்திரத்தை அரச பதிவு அலுவலகம் ஒன்றுக்கு அனுப்பினால் திருமண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். ஒன்ராறியோவில், இந்த அலுவலகம் Service Ontario என அழைக்கப்படுகின்றது.

## ஏனைய நாடுகளில் நிகழ்ந்த திருமணங்கள் கனடாவில் சட்டபூர்வமானவையா?

அனேகமான நேரங்களில், கனடாவுக்கு வெளியே நடாத்தப்படும் சட்டபூர்வமான திருமணங்கள் இங்கேயும் சட்டபூர்வமானவையாகக் கருதப்படுகின்றன. கனடாவில் நீங்கள் வாழ்ந்துகொண்டு திருமணம் செய்துகொள்வதற்காக இன்னொரு நாட்டுக்குச் சென்றால், உங்களுடைய சடங்கு, நீங்கள் திருமணம் செய்துகொள்ளும் அந்த நாட்டின் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கனடாவில் சட்டபூர்வச் செல்லுபடியாகக் கூடிய ஒரு திருமணமாக இருப்பதற்கு, கனடாச் சட்டத்தின் கீழ் திருமணம் யார் செய்யலாம் என்ற விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். (மேலே விளங்கப்படுத்தப்பட்டுள்ளது).

## பலதார மணம் செய்தல்

ஒன்றுக்கும் மேற்பட்ட துணைவரை வைத்திருத்தல் (“பலதார மணம் செய்தல்” என்று அழைக்கப்படுகிறது) கனடாச் சட்டத்துக்கு எதிரானது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பலதார மணம் சட்டபூர்வமானதாக இருக்கும் ஒரு நாட்டில் நீங்கள் திருமணம் செய்திருந்தால், ஒருவருடனான ஒரு திருமணமே இங்கே சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

பலதார மணம் செய்வது தொடர்பாக, இங்கே கனடாவுக்குக் குடிபெயர்ந்திருந்தால், உங்களுக்கு குற்றவியல்ரீதியான மற்றும் குடிவரவுரீதியான பின்விளைவுகள் இருக்கலாம். பலதார மணம் உங்களை எப்படிப் பாதிக்கலாம் என்பது பற்றிய கவலை உங்களுக்கு இருந்தால், ஒரு குற்றவியல்ரீதியான சட்டத்தரணி மற்றும் ஒரு குடிவரவுரீதியான சட்ட சட்டத்தரணி உங்களுக்கு உதவ முடியும்.

உங்களுடைய திருமணம் கனடாவில் சட்டபூர்வமானதா என்பது பற்றி உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால் அல்லது உங்களுடைய மற்றும் உங்களுடைய பிள்ளைகளின் உரிமைகள் பற்றி உங்களுக்குக் கேள்விகள் இருந்தால், குடும்பச் சட்ட சட்டத்தரணியிடமிருந்து சட்ட ஆலோசனை பெறுவது முக்கியமாகும்.

## கனேடியப் பிரஜை ஒருவரை நான் திருமணம் செய்தால், இயல்பாகவே நானும் ஒரு கனேடியப் பிரஜையாக வருவேனா?

கனேடியப் பிரஜை ஒருவரைத் திருமணம் செய்வது, உங்களுக்கான கனேடியப் பிரஜா உரிமையை இயல்பாகவே தர மாட்டாது. ஒரு கனேடியப் பிரஜையாக வருவதற்கு குறிப்பிட்ட நடைமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும். அத்துடன் கனேடியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான சில அடிப்படைகளை நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டும். கனேடியப் பிரஜை ஒருவரைத் திருமணமானவர்களுக்கான விசேட நடைமுறை எதுவுமில்லை, ஆனால் கனேடியப் பிரஜை அல்லது நிரந்தரக் குடியிருப்பாளர் ஒருவர் கனடாவில் நிரந்தரக் குடியிருப்பாளராக வாழ்வதற்காக துணை ஒருவரைப் பொறுப்பேற்கலாம்.

நிரந்தரக் குடியிருப்பு, பொறுப்பேற்றல் அல்லது கனேடியப் பிரஜாவுரிமை பற்றிய மேலதிக விபரங்களுக்கு, **கனடாக் குடியுரிமை மற்றும் கனடாவுக்குக் குடிவரவு** என்ற வலைத்தளத்தை **www.cic.gc.ca** ல் பாருங்கள். “குடிபெயர்ந்த, அகதிநிலை அல்லது அந்தஸ்து அற்ற பெண்களுக்கான குடும்பச் சட்ட விடயங்கள்” என்ற எங்களின் கையேட்டையும் நீங்கள் வாசிக்கலாம்.

## கனடாவில் விவாகரத்து மற்றும் பிரிந்திருத்தல்

உங்களுடைய திருமணத்துக்குச் சட்டரீதியாக முற்றுப்புள்ளி வைத்தல் **விவாகரத்து** ஆகும். திருமணமான அல்லது திருமணமாகமல் ஒரு உறவில் இருக்கும் இரண்டு பங்காளர்கள்

தங்களுடைய உறவுக்கு முற்றுப்புள்ளி வைத்து வாழ்கையை வேறாக வாழ முடிவெடுத்தல் **பிரிந்திருத்தல்** ஆகும்.

நீங்கள் திருமணமாகியவராக இருந்தால், சட்டபூர்வமான விவாகரத்தை எடுக்காவிட்டாலும் கூட, நீங்கள் பிரிந்திருக்கலாம். ஆனால், நீங்களோ அல்லது உங்களுடைய பங்காளரோ இன்னொருவரைத் திருமணம் செய்ய விரும்பினால், முதலில் நீங்கள் விவாகரத்துச் செய்ய வேண்டும்.

குடும்ப உடைவு, ஒரு இக்கட்டான, மனஅழுத்தம் நிறைந்த நேரம் ஆகும். நீங்களும் உங்களுடைய துணைவரும் விவாகரத்துச் செய்தால் அல்லது பிரிந்திருந்தால், சட்டரீதியான பல விடயங்களை நீங்கள் தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். நிதிரீதியான ஆதரவு, உங்களுடைய பிள்ளைகளுக்கான ஒழுங்குகளைச் செய்தல், குடும்பச் சொத்தைப் பிரித்தல் பற்றித் தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும்.

அனைத்து நிலைமைகளுக்கும் சட்டத்தரணி ஒருவர் தேவைப்பட மாட்டார், ஆனாலும் பல குடும்பரீதியான சட்டப் பிரச்சினைகளுக்கு சட்ட ஆலோசனை பெறுவது முக்கியமாகும். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரை எப்படிக் கண்டறிவது மற்றும் அவருக்கு எப்படிக் கட்டணம் செலுத்துவது என்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு, எங்களுடைய FLEW கையேட்டிலுள்ள, “*உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு உதவி தேடல்*” என்ற பகுதியைப் பாருங்கள்.

திருமணமான துணைவர்கள் தங்களுடைய திருமணத்துக்குச் சட்டரீதியாக முற்றுப்புள்ளி வைப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து விவாகரத்து உத்தரவுப் படிவத்தைப் பெற வேண்டும். விவாகரத்தை நீங்கள் பெற்றுக்கொண்டால், அதே நேரத்தில், உங்களுடைய குடும்பச் சொத்தைப் பங்கிடல், உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைக்குமான ஆதரவுப் பணம், ஒரு பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாப்பை எடுக்கின்றாரா அல்லது பிள்ளைகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெறுகின்றாரா என்பதைத் தீர்மானிக்கும் பிள்ளைவளர்ப்புத்

திட்டங்கள் போன்ற குடும்பச் சட்ட விடயங்களைத் தீர்மானிக்கும்படி நீதிமன்றத்தை நீங்கள் கேட்க முடியும்.

விவாகரத்தை எடுக்காமல், நீங்கள் பிரிந்தாலும்கூட, இந்த விடயங்களைத் தீர்மானிக்கும்படி நீதிமன்றத்தை நீங்கள் கேட்க முடியும்.

நீங்களும் உங்களுடைய துணைவரும், சொத்து, ஆதரவுப் பணம் மற்றும் பிள்ளை வளர்ப்புப் பற்றி உங்களுடைய சொந்த ஏற்பாடுகளை நீதிமன்றத்துக்குச் செல்லாமலேயே கூட செய்ய முடியும். பிரிந்துபோதல் உடன்படிக்கையில் உங்களுடைய உடன்படிக்கையை எழுதி வைப்பது நல்லது. FLEW வலைத்தளத்தில் பிரிந்துபோதல் உடன்படிக்கைகள் பற்றிய மேலதிக விபரத்தை நீங்கள் பார்க்க முடியும்.

## விவாகரத்தை நான் எப்படிப் பெறுவது?

கனடாவில் விவாகரத்துக்கு விண்ணப்பிப்பதற்கு, நீங்களும் உங்களுடைய துணைவரும் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கும் ஆண்டுக்கு முந்திய வருடத்தில் குறைந்தது ஒரு வருடம் கனடாவில் வசித்திருக்க வேண்டும். குடும்பச் சட்ட விடயங்களைக் கையாளும் நீதிமன்றம் ஒன்றில், அனைத்துப் பத்திரங்களையும் ஒன்றாகச் சேர்த்த விண்ணப்பம் ஒன்றின் மூலம் நீங்கள் விவாகரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். **விவாகரத்துக்கான விண்ணப்பம்** நீதிமன்றச் செயல்முறைகளை ஆரம்பிப்பதுடன், நீதிமன்றம் எதைத் தீர்மானித்துக் கட்டளையிட வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதை விளங்கப்படுத்தும்.

விவாகரத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உங்களுடைய துணைவரின் அனுமதி உங்களுக்குத் தேவையில்லை. விவாகரத்துக்கான விண்ணப்பத்தை நீங்கள் அல்லது உங்களுடைய துணைவர் தாக்கல்செய்யலாம் அல்லது நீங்கள் இருவரும் பத்திரங்களை ஒன்றாகத் தாக்கல்செய்யலாம். இது **கூட்டு விண்ணப்பம்** எனப்படும். விவாகரத்தை மட்டும் உங்களுடைய விண்ணப்பம் கேட்கலாம் அல்லது அதே நேரத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பு, பிள்ளை மற்றும்

துணைவருக்கான ஆதரவுப் பணம், குடும்பச் சொத்தைப் பங்கிடும் விதம் பற்றியும் கேட்கலாம். சட்டத்தரணி ஒருவரின் உதவியுடனோ அல்லது உதவியில்லாமலோ விண்ணப்பத்தை நீங்கள் தாக்கல்செய்யலாம்.

விவாகரத்தைப் பெறுவதற்கு, உங்களுடைய திருமணபந்தம் உடைந்து விட்டது என்றும் நீங்கள் திரும்பவும் ஒன்றாகத் வாழ்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றும் நீங்கள் காட்டவேண்டும். இதைச் செய்வதற்கு மூன்று வழிகள் உள்ளன:

**1. "வெவ்வேறாகத் தனியாக" வாழல்**: குறைந்தபட்சம் ஒரு **வருடத்துக்கு** உங்களுடைய துணைவரிலிருந்து வெவ்வேறாகத் தனியாக வாழல், உங்களுடைய திருமணபந்தம் உடைந்து விட்டது என்பதைக் காட்டுவதற்கு மிகவும் சுலபமான வழி ஆகும். திருமணமான தம்பதிகள் போல நீங்கள் நடந்துகொள்ளாதவரை, உங்களுடைய துணைவர் வாழும் அதே வீட்டில் நீங்கள் தொடர்ந்து வாழ்ந்தாலும்கூட, "வெவ்வேறாகத் தனியாக" நீங்கள் வாழலாம். நீங்கள் பிரிந்திருந்த அந்த வருடகாலத்தின் போது, உங்களுடைய திருமணத்தைச் சரிப்படுத்த நீங்கள் முயற்சி செய்திருந்தாலும், 90 நாட்களுக்கும் குறைவான நாட்களே அந்த உறவில் இருந்திருந்தால், அப்போதும் நீங்கள் பிரிந்திருப்பதாகவே கருதப்படுவீர்கள்.

உங்களுடைய துணைவரிலிருந்து நீங்கள் பிரிந்தவுடன் விவாகரத்துக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம், ஆனால், நீங்களும் உங்களுடைய துணைவரும் முழுமையாக ஒரு வருட காலத்துக்குப் பிரிந்திருக்கும் வரைக்கும் நீதிமன்றம் விவாகரத்தை வழங்க மாட்டாது.

**2. பிறர்மனைநயத்தல்/முறைபிறழ்புணர்ச்சி**: உங்களில் ஒருவர் முறைபிறழ்புணர்ச்சி செய்தாலும் விவாகரத்து எடுப்பது சாத்தியம். திருமணமான துணைவர் ஒருவர் தான் திருமணம் செய்யாத இன்னொருவருடன் அன்யோன்யமாக இருத்தல், பிறர்மனைநயத்தல்/முறைபிறழ்புணர்ச்சி எனப்படும்.

**3. துன்புறுத்தல்/கொடுமை:** நீங்கள் இனியும் ஒன்றாகச் சேர்ந்து வாழ முடியாத அளவுக்கு, உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் உங்களுடைய துணைவர் கொடுமைப்படுத்தி வந்தாலும் (துன்புறுத்தி வந்தாலும்) விவாகரத்துக்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும்.

பிறர்மனைநயத்தல்/முறைபிறழ்புணர்ச்சி அல்லது கொடுமைபடுத்தலின் போது, உங்களுடைய விவாகரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் ஒரு வருடம் காத்திருக்கத் தேவையில்லை. ஆனால், இந்த வகையான வழக்குகளில், பிறர்மனைநயத்தல் / முறைபிறழ்புணர்ச்சி அல்லது கொடுமைபடுத்தல் / துன்புறுத்தலுக்கான ஆதாரங்களை நீங்கள் காட்டவேண்டும். அத்துடன் இவை வழக்கைச் சிக்கலானதாகவும் செலவு மிக்கதாகவும் மாற்றும். சில வேளைகளில், நீதிமன்ற அமைப்புமுறை விரைவானதாக இல்லாமல் இருக்கலாம். விவாகரத்தைப் பெறுவதற்கு இந்தக் காரணங்களைப் பாவித்தல், குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்கு நீங்கள் வெவ்வேறாகத் தனிய வாழ்கின்றீர்கள் எனக் காட்டுவதைவிட எந்த விதத்திலும் விரைவானதாக இல்லாமல் இருக்கலாம். உங்களுடைய நிலைமைக்கேற்ற, சிறந்த தெரிவை நீங்கள் புரிந்து கொள்ள உதவும் குடும்பச் சட்டச் சட்டத்தரணி ஒருவரிடமிருந்து சட்ட ஆலோசனையைப் பெறுவது முக்கியமானது.

## ஏனைய நாடுகளில் எடுக்கப்பட்ட விவாகரத்துக்கள் கனடாவில் சட்ட பூர்வமானவையா?

இன்னொரு நாட்டில் எடுக்கப்பட்ட ஒரு விவாகரத்து, கனடாவில் சட்டபூர்வமானது என ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வித்தியாசமான வழிகள் இருக்கின்றன.

1. நீங்கள் விவாகரத்துக்கு விண்ணப்பிக்க முன்பாக, நீங்களோ உங்களுடைய துணைவரோ வேறொரு நாட்டில் குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்கு வாழ்ந்திருப்பதுடன், விவாகரத்தையும் பெற்றிருந்தால், அது சட்டபூர்வமானது எனக் கனடாவில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விவாகரத்துக்கு விண்ணப்பிக்க முன்பாக, துணைவர்களில் எவரும் அந்த நாட்டில் குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்கு வாழ்ந்திராவிட்டாலும், இன்னொரு நாட்டில் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அந்த நாட்டுடன் தனக்கு “உண்மையான மற்றும் கணிசமான தொடர்பு” இருக்கின்றது என நிரூபிக்கலாம் என்பதுடன் விவாகரத்தும் அங்கு வழங்கப்பட்டிருந்தால், அது சட்டபூர்வமானது எனக் கனடாவில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அந்த நாடு உங்களுடைய சொந்த நாடாக இருப்பதுடன், உங்களுடைய உறவுக்கு முற்றுப்புள்ளி வந்தவுடன் அங்கு திரும்பிப் போயிருந்திருந்தால், அல்லது விவாகரத்து விண்ணப்பித்திருந்தவர் அந்த நாட்டில் சொந்தமாக நிலம் வைத்திருக்கின்றார் அல்லது விவாகரத்து வழங்கிய நாட்டில் நிறைய நேரம் செலவிடுகின்றார் என்றால், அந்த நாட்டுடன், “உண்மையான மற்றும் கணிசமான தொடர்பு” இருக்கின்றது என்பதைக் காட்டும் சில வழிகளாக அவை இருக்கும்.

வேறொரு நாட்டில் நீங்கள் விவாகரத்துச் செய்திருந்தால், துணைவருக்கான ஆதரவு மற்றும் கனடாவிலுள்ள குடும்பச் சொத்துப் பங்கிடலுக்கான உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை அது பாதிக்கலாம். வேறொரு நாட்டில் வழங்கப்பட்ட விவாகரத்துப் பற்றிய கரிசனைகள் உங்களுக்கு இருந்தால், இங்குள்ள குடும்பச் சட்டச் சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பது நல்லது.

வேறொரு நாட்டில் நீங்கள் விவாகரத்துச் செய்திருப்பதுடன், கனடாவில் இன்னொருவரைத் திருமணம் செய்ய நீங்கள் விரும்பினால், இங்கு நீங்கள் திருமணம் செய்வதற்கு உங்களுடைய விவாகரத்துக்கான ஆதாரத்தை நீங்கள் காட்ட வேண்டும். இதைச் செய்வதற்கு, விவாகரத்து உத்தரவின் அதிகாரபூர்வமான பிரதி ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். கனடாச் சட்டத்தின் கீழ், உங்களுடைய விவாகரத்து அங்கீகரிக்கப்பட வேண்டும் எனச் சொல்லும் கடிதம் ஒன்று, நீங்கள் திருமணம் செய்ய விரும்பும் கனேடிய

மாகாணத்தின் அல்லது பிரதேசத்தின் சட்டத்தரணியிடமிருந்து உங்களுக்குத் தேவைப்படும்.

விவாகரத்து உத்தரவு ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் இருக்காவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் ஒருவரால் அதை நீங்கள் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் மொழிபெயர்ப்பிக்கவும் வேண்டும். இதற்கு சட்டத்தரணியும் உதவிசெய்யலாம்.

## விவாகரத்து மற்றும் மறுமணத்துக்கான சமயத் தடைகள்

ஒன்ராறியோவில், மத அல்லது குடிமுறைச் (மதரீதியற்ற) சடங்கு மூலம் திருமணம் செய்த தம்பதிகளுக்கு சட்டபூர்வமான விவாகரத்தை நீதிமன்றம் ஒன்று வழங்க முடியும். ஆனால், சில மதங்கள் விவாகரத்தை ஏற்றுக்கொள்வதில்லை அத்துடன் குடிமுறைரீதியான (மதரீதியற்ற) விவாகரத்தை நீங்கள் எடுத்தால், மதரீதியான சமூகங்களில் நீங்கள் பங்குகொள்ள முடியாது அல்லது மதரீதியான சடங்கு மூலம் மறுமணம் செய்ய முடியாது என அவை சொல்லக்கூடும். உங்களுடைய மத முறைப்படி திருமணம் செய்ய கனேடிய குடும்பச் சட்டம் உங்களுக்கு உரிமை தருவதில்லை. ஆனால், சட்டரீதியான தேவைகளைப் பூர்த்திசெய்யும் (மேல் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது) அனைவருக்கும் கனடாவில் குடிமுறைச் சடங்குடன் திருமணம் செய்வதற்கு உரிமையுண்டு.

மதரீதியான விவாகரத்தை உங்களுக்குக் கொடுக்கும்படி உங்களுடைய துணைவரை கனேடியக் குடும்பச் சட்டம் வற்புறுத்த முடியாது. எனினும்,குடும்பச் சட்ட விடயங்களைத் தங்கள் வழியில் தீர்ப்பதற்கு மதரீதியான விவாகரத்துக்கான வாக்குறுதியை அல்லது மறுப்பைத் துணைவர்கள் பயன்படுத்த முடியாது என கனேடியச் சட்டங்கள் கூறுகின்றன.

உங்களுடைய விசுவாசமான சமூகத்திடையே நீங்கள் மீண்டும் திருமணம் செய்வதை உங்களுடைய முன்னாள் வாழ்க்கைத் துணைவர் தடுக்க முயற்சித்தால், நீதிமன்றம் பிள்ளைப் பாதுகாப்பு, ஆதரவுத் தொகை அல்லது குடும்பச் சொத்து

பங்கிடல் பற்றிய உங்களுடைய முன்னாள் வாழ்க்கைத் துணைவரின் குடும்ப சட்ட விண்ணப்பம் பற்றி முடிவு செய்வதை மறுக்க முடியும்.

## இணைந்துவாழும் துணைவர்களின் (Common-Law Partners) பிரிந்துபோதல்

உறவொன்றில் சேர்ந்து வாழும் சோடிகள், சட்டபூர்வமாகத் திருமணம் செய்யாமலிருப்பதைத் தெரிவுசெய்யும் போது, "**இணைந்துவாழும் (common-law)**" பங்காளிகள் எனச் சில வேளைகளில் அழைக்கப்படுகின்றனர். ஒருவரிலிருந்து ஒருவர் பிரிவதன் மூலம் இணைந்துவாழும் பங்காளிகள் தங்களுடைய உறவுக்கு முற்றுப்புள்ளி இடலாம். சட்டபூர்வமாக நீங்கள் திருமணம் செய்யாவிடில், விவாகரத்தை பெற வேண்டிய தேவை உங்களுக்கு இருக்காது.

"இணைந்துவாழும்" பங்காளி என எவர் கருதப்படுவார் என்பது பற்றியும் பிரியும்போது குடும்பச் சட்ட உரிமைகளில் எவை இணைந்துவாழும் பங்காளிகளுக்கு இருக்கின்றன என்பது பற்றியும் ஒவ்வொரு மாகாணத்திலும் வித்தியாசமான சட்டங்கள் இருக்கின்றன. பின்வருவன நிலைமைகள் இருப்பின், ஒன்ராறியோவிலுள்ள, இணைந்துவாழும் பங்காளிகளுக்கு குறித்த குடும்பச் சட்ட உரிமைகள் உள்ளன:

- வருடங்கள் அல்லது அதற்கு அதிகமாக அவர்கள் சேர்ந்து வாழ்ந்தால், அல்லது
- அவர்கள் இருவருக்கும் சேர்த்து ஒரு பிள்ளை இருப்பதுடன் நிலையான உறவொன்றில் அவர்கள் இருந்தால்.

ஒன்ராறியோவிலுள்ள இணைந்துவாழும் பங்காளிகள் பிரியும்போது, பிள்ளைப் பாதுகாப்பு அல்லது அணுகல், பிள்ளைக்கான மற்றும் துணைவர் ஆதரவுக்கு மனுச் செய்யும் உரிமை அவர்களுக்கு உள்ளது.

சட்டம் பல வழிகளில் இணைந்துவாழும் வாழ்க்கையை அங்கீகரித்த போதும்கூட, திருமணமான தம்பதிகள்

பிரியும்போதுள்ள ஒன்ராறியோவின் குடும்ப சொத்துப் பங்கிடல் பற்றிய விதிகள் இணைந்துவாழும் ஜோடிகளுக்குப் பொருந்தாது. சில சந்தர்ப்பங்களில், இணைந்துவாழும் உறவுக்கு நீங்கள் முற்றுப்புள்ளி இடும்போது, உங்களுக்குச் சொந்தமில்லாத குடும்பச் சொத்தைப் பகிரும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது என நீதிமன்றம் உத்தரவிடலாம்.

## உங்களுடைய உறவின் முடிவில் குடும்ப விடயங்களைத் தீர்மானித்தல்

நீங்கள் பிரிந்துவாழ்ந்தால் என்ன விவாகரத்துச் செய்தால் என்ன, சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றத்தின் உதவியுடனோ அல்லது உதவியில்லாமலோ நீங்களும் உங்களுடைய துணைவரும் பணம், மற்றும் உங்களுடைய குடும்பம் பற்றிய ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும்.

உங்களுடைய துணைவருடன் உங்களால் சுலபமாகவும் நேர்மையாகவும் கதைக்க முடியுமானால், பிள்ளைப் பாதுகாப்பு மற்றும் அணுகல், பிள்ளைக்கான மற்றும் துணைவருக்கான ஆதரவு, குடும்பச் சொத்துப் பகிர்வு போன்ற குடும்பச் சட்டப் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்பது பற்றி உங்களுடைய சொந்த உடன்படிக்கையை உருவாக்க முடியும். திகதியுடன், உங்களுடைய உடன்படிக்கையை எழுத்தில் எழுதி இருவரும் கையொப்பமிடுவது நல்லது. அந்த உடன்படிக்கையைச் சரிபார்க்கவும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவும் தங்களுக்கான சட்டத்தரணி ஒருவரை துணைவர்கள் இருவரும் அமர்த்துவது சிறப்பானது. மாற்றீட்டுப் பிணக்குத் தீர்வு (நீதிமன்றத்துக்கு வெளியேயான உடன்படிக்கை) மற்றும் பிரிந்துவாழ்தல் உடன்படிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை FLEW வலைத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்.

உங்களாலும் உங்களுடைய துணைவராலும் உடன்பட முடியாமல் இருந்தால் அல்லது இந்த உறவு துன்புறுத்தும் ஒரு உறவாக இருந்தால் அல்லது இருந்திருந்தால், பிள்ளைவளர்ப்பு ஏற்பாடுகள், நிதிரீதியான ஆதரவு மற்றும் குடும்பச் சொத்து பங்கிடும் விதம் போன்ற பிரச்சினையை தீர்ப்பதற்கு நீங்கள்

சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதும் நீதிமன்றத்துக்குப் போவது பற்றிக் கருதுவதும் மிகவும் பாதுகாப்பானது.

*விவாகரத்தின் அல்லது பிரிந்துவாழலின் பின்பான குடும்பச் சட்ட உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு எங்களுடைய கையேடுகளைப் பார்க்கவும்: "பிள்ளைகளைப் பொறுப்பெடுத்தல் மற்றும் அணுகல்", "பிள்ளைக்கான ஆதரவு", "துணைவருக்கான ஆதரவு", "வீட்டுவிடயங்கள் பற்றிய ஒப்பந்தங்கள்", மற்றும் "குடும்பச் சட்டத்தில் சொத்து பிரிக்கப்படும் விதம்".*

இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEW ன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை மாகாணத்தின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

Law Foundation of Ontario நிதி உதவி அளிக்கும் அதே வேளையில் இந்த வெளியீட்டின் உள்ளடக்கம், Foundation ன் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**நெருக்கமான உறவு ஒன்று முறியும் போது வன்முறைக்கான ஆபத்து அதிகளவில் உண்டு. உங்களுக்கு உடனடி ஆபத்து இருந்தால், 911ஐ அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்தவரோ ஆபத்தில் இருந்தால் உதவி பெறுவது பற்றிய தகவல்களுக்கு FLEW இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்**

ஒன்ராறியோவில் வாழும் பிரெஞ் பேசும் பெண்ணாக நீங்கள் இருந்தால், குடும்ப சட்டவியல் நீதிமன்ற செயல்முறைகளின் போது பிரெஞ் மொழிச் சேவைகளை அணுகுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுடைய உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, ஒரு சட்டத்தரணியை, ஒரு சமூக சட்ட மையத்தை அல்லது Femaide ஆதரவு இணைப்பை 1-877-336-2433, TTY 1-866-860-7082 ல் தொடர்பு கொள்ளுங்கள்.

பிரெஞ்சில் சேவைகளை எப்படி அணுகுவது என்பது பற்றிய மேலதிக விபரங்களை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca ல் நீங்கள் பார்க்கலாம்.

## தமிழில் உள்ள குடும்பச் சட்ட விடயங்கள்*

1. முரண்பாட்டுக்கான மாற்றுத் தீர்மானமும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளைக்கான ஆதரவு (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான பொறுப்பும் அணுகலும் (TML 005)
6. குடும்ப ஒப்பந்தங்கள் (TML 006)
7. குடும்பச் சட்ட மத்தியஸ்தம் (TML 007)
8. குடிவரவாளர், அகதி மற்றும் தகுதிநிலையற்ற நிலைகளிலுள்ள பெண்களுக்கான குடும்பச் சட்ட விவகாரங்கள் (TML 008)
9. உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைக்கு உதவி தேடல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து பிரிக்கப்படும் விதம் (TML 010)
11. **திருமணமும் விவாகரத்தும் (TML 011)**
12. வாழ்க்கைத் துணைக்கான ஆதாரம் (TML 012)

* *இந்தக் கையேடு பல வடிவங்களிலும் மொழிகளிலும் கிடைக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.onefamilylaw.ca ஐப் பார்வையிடுங்கள். உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் விளங்கிக்கொள்வதற்கு உதவும் மேலதிக விடயங்களையும் இந்த இணையத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la fami le
Le droit de savoir

The Law Foundation of Ontario

Funded by: / Financé par :
Ontario

இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEWன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை நிதிவழங்கியோரின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை